பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை 08.10.2024 கதிர் 335

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியில் சுமந்திரனுக்குஇருந்துவந்ததடைகள் ஒவ்வொன்றாக நீங்கி வருகின்றன என்றே தோன்கின்றது. உட்கட்சித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட

2

# கோட்டாவைக் கொல்வதற்காகவே அவரது மீரிகான வீடு மீது தாக்குதல்

## அவரது செயலாளர் சிஐடியிடம் வாக்குமூலம்

அரகலய போராட்டம் முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் மிரிஹான இல்லத்தின் மீதான தாக்குதல்கள் அவரை கொலை செய்யும் நோக்கத்துடனேயே நடத்தப்பட்டதாக அவரதுமுன்னாள்பிரத்தியேகசெயலாளர் சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இல்லத்தின் மீதான தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வுதிணைக்களத்தில் (சிஐடி) வாக்குமூலம் வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க ஆட்சிக்கு வந்தவுடன் பொருட்களின் விலைகளைக் குறைப்பதாக அறிவித்திருந்த போதும் அவை இதுவரையிலும் நடைமுறைக்கு வரவில்லை.

அவர்ஆட்சிக்குவந்து14நாட்களுக்குப் பின்னரே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரைக் கொலை செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரகலய போராட்டம் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்சவுக்கான பாதுகாப்பு கேள்விக் குறியாகவே இருந்தது.

அங்கு வந்திருந்த குழுவினர் கோட்டாபய ராஜபக்சவை

8



## மட்டக்களப்பிலும் முன்னணி நேற்று வேட்புமனு தாக்கல்

2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காகயாழ்.மாவட்டத்தில்கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டக்களப்பு மாவட்ட வேட்புமனுவை பழைய மாவட்டச் செயலகத்தில்

8

## வடக்கின் சுற்றுலா வளர்ச்சிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

### ஜனாதிபதியுடனான சந்திப்பில் இணக்கம்


இலங்கையின் சுற்றுலா, வலுசக்தி மற்றும் சிறு தொழில்துறைகளின் அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்துள்ளது. அதேநேரம் வடக்கின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு உதவவும் அது இணங்கியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோவை நேற்று

8

# பதவி துறந்தார் மாவை கட்சி தாவினார் சசிகலா

## வேட்பாளர்கள் தெரிவு அதிருப்தியால் முடிவு





தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தனது பொறுப்புகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். அதேநேரம் அவரது சம்பந்தியும் மாமனிதர் ரவிராஜ்ஜின் மனைவியுமான சசிகலா நேற்று தமிழ் அரசுக் கட்சியிலிருந்து தாவி ஜனநாயகத் தமிழ்

2

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பணிப்பாளர் பதவி விலகினார்

இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க விஜேரத்ன தமது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் கையளித்துள்ளதாகஜனாதிபதிசட்டத்தரணி உதித இகலஹேவா உயர்

8

## இ.தொ.கா. கட்சியிலிருந்து பாரத் அருள்சாமி விலகல்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர்பதவியிலிருந்தும்,கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் பாரத்அருள்சாமிபதவிவிலகும்கடிதத்தை அக்கட்சியின் பொதுச் செயலாளர்

8

## வரி நிலுவையை வசூலிக்க வீடுவீடாக தீவிர நடவடிக்கை

### இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

வருமான வரி நிலுவையில் வைத்துள்ளதனிநபர்களின்குடியிருப்புகள் உள்ளிட்ட வளாகங்களுக்குச் சென்று, அவர்களிடமிருந்து நேற்று முதல் அந்த வரிகளை வசூலிக்கத் தீர்மானித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி வரையில் 1,417 பில்லியன் ரூபா வரி நிலுவையில்

8



## ரணில் தரப்பின் முட்டாள்தன முடிவால் நாட்டின் பொருளாதாரம் சுருங்கிவிட்டது

### சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆளும் தரப்பு முட்டாள்தனமான முடிவை எடுத்து இலங்கையின் பொருளாதாரத்தைச் சுருக்கிவிட்டது என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின்தலைவர்சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கெஸ்பேவ தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார சுழற்சி காணப்படும் போது, பணவீக்கம் குறைந்து, அழுத்தம் குறைந்து பொருளாதாரம் வலுப்பெறும். இவ்வாறான

8

## யாழ், வன்னியில் ஈ.பி.டி.பி நேற்று வேட்புமனு தாக்கல்

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களுக்கான தமது வேட்புமனுக்களை ஈ.பி.டி.பி. கட்சி நேற்று தாக்கல் செய்தது. மாவட்ட உதவி தேர்தல் அத்தாட்சி அலுவலகத்தில்கட்சியின்செயலாளர் நாயகம், முன்னாள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாதலைமையில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. வன்னியில்முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தலைமையில் வேட்புமனு

8

### நாடாளுமன்றத் தேர்தல்

## வேட்பாளர்களின் சொத்து விவரம் சமர்ப்பிக்கப்பட்டே ஆகவேண்டும்

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

2024பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் அனைத்து வேட்பாளர்களும் தமது சொத்துக்கள் மற்றும்பொறுப்புக்கள்தொடர்பான விவரங்களைக் கையளிக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுதெரிவித்துள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினம் வரையிலானதமது சொத்துக்கள் மற்றும்பொறுப்புக்கள்தொடர்பான விவரங்களைக் கையளிக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுதெரிவித்துள்ளது.

தேசியப் பட்டியல் வேட்பாளர்களும் தமது வேட்புமனுக்களுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரங்களைக் கையளிக்க வேண்டுமென

8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பின்னர் அவரது கட்சிக்குள் அவரது மீள் எழுச்சி அசாத்தியமானதாக விஸ்வரூபம் எடுத்துள்ளது. அதற்கு முன்பு தாக்குப்பிடிக்க முடியாமல் அவரது எதிரிகள் ஓடிஒழியத் தொடங்கியிருக்கிறார்களோ என்றுபடுகின்றது. அதுவும் கட்சிக்குள் அவரை விமர்சித்தவர்கள் எல்லோரும் பதவிக்கு ஆசைப்பட்டே அவரை எதிர்த்து வந்தார்கள் என்பதை அப்பட்டமாக வெளிக்காட்டியிருப்பதுதான் பரிதாபம்.

தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியல் வெளியானதைத் தொடர்ந்து உடனடியாகவே கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் மத்திய செயற்குழு உறுப்பினருமான சட்டத்தரணி தவராசா கட்சியிலிருந்து தான் விலகுகிறார் என்று அறிவித்தார். அவரைத் தொடர்ந்து நேற்றுமாமனிதர்ரவிராஜின்மனைவிசசிகலா கட்சியிலிருந்து வெளியேறி ஜனநாயகக் கூட்டணியில் சேர்ந்தார். தொடர்ந்து மாவை சேனாதிராசவும் கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து வெளியேறியுள்ளார்.

கட்சிக்குள் சுமந்திரனின் வகிபாகம் குறித்து இதுவரை கடுமையான விமர்சனங்களைச் செய்து வந்தவர்கள் இவர்கள்தான். மாவையர் வெளிப்படையாகச் சுமந்திரனை எதிர்த்து விமர்சித்ததில்லை என்றாலும் தனது செயல்கள் மூலம் எதிர்ப்பைப் பதிவு செய்து வந்தார். வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் ஏற்கனவே ஓரங்கட்டப்பட்டுவிட்டார். கட்சிக்குள் சுமந்திரன் எதிர்ப்பணியில் இன்னும் சிறீதரன், சிறீநேசன், யோகேஸ்வரன் ஆகியோர்தான் எஞ்சியிருக்கிறார்கள். அந்த விக்கெட்டுக்களும் சரிந்தால் கட்சி சுமந்திரனின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வரும். உசுப்பி விட்டு உசுப்பிவிட்டே அந்தாளை உச்சிக் கொப்பில் ஏற்றிவிட்டார்கள் இவர்கள் எல்லோரும்.

................

தமிழ் அரசுக் கட்சியிலிருந்து ஜனநாயகக் கூட்டணிக்குத் தாவியிருக்கிறார் மாமனிதர் ரவிராஜ்ஜின் மனைவி சசிகலா. தாவிய உடனேயே அவருக்கு தேர்தலில் போட்டியிட வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர் வேட்புமனுவில் கையெழுத்திட்ட படம் நேற்று ஊடகங்களில் வந்திருந்து. அதில் புளொட் தலைவர் சித்தார்த்தன், சாவகச்சேரியில் புளொட் உறுப்பினராக உள்ளவரான ராஜ் ஆகியோரோடு ரெலோவின் பேச்சாளரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான சுரேன் குருசாமியும் காணப்பட்டார். வேட்புமனு சித்தர் வீட்டில் இருந்தது. அதனால் அவர் அங்கிருந்தார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். ராஜ் சாவகச்சேரியிலிருந்து சசிகலாவை அழைத்து வந்திருப்பார் என்பதையும் -புரிந்துகொள்ளலாம். ஆனால் சுரேன் ஏன் அங்கிருந்தார் என்பது ஆர்வத்தைத் தூண்டியது. அதனால் ரெலோவிற்குள் நோண்டிப் பார்த்தேன்.

சசிகலாவை ஜனநாயகக் கூட்டணிக்குள் கூட்டிவந்த 'பக்கேஜ்' சுரேனால் தயாரிக்கப்பட்டது என்கிறார்கள் ரெலோவினர். ஏற்கனவே அது தொடர்பில் இருவருக்கும் இடையில் பேச்சு நடந்திருந்துள்ளது. தேர்தலில் போட்டியிடுவதற்கான நிதி மற்றும் அனுசரணைகளைத் தான் வழங்குவார் என்று சுரேன் வாக்குறுதியளித்-துத்தான் சசிகலாவை இணங்க வைத்தாராம். அதற்குப் பிரதியுபகாரமாக சசிகலா சுரேனுக்கும் சேர்த்து வாக்குக் கேட்க வேண்டும் என்பதுதான் 'டீல்' என்கிறார்கள் ரெலோவினர். என்னை ஆச்சரியப்படுத்திய கருத்து ஒன்றையும் அவர்களே சொன்னார்கள், புலிகளால் மாமனிதர் என்று அறிவிக்கப்பட்ட ஒருவரின் மனைவி போயும் போயும் சேர்வதற்கு ஆள் இல்லாமல், சிறிரெலோவோடு சேர்ந்து இல்லாத பொல்லாத அட்டூழியங்களை எல்லாம் செய்த ஒருத்தருடன், கொழும்பில் தமிழர் ஒருவரையே ஏமாற்றி வீட்டை மோசடி செய்தார் என்ற வழக்கை எதிர்கொண்டுள்ள ஒருவருடன் சேர்ந்து தேர்தலை எதிர்கொள்கிறார் என்பது எவ்வளவு பெரும் சீரழிவு, அவர் ஜனநாயகக் கூட்டணிக்கு வந்தது எமக்குப் பலம்தான், ஆனால் யாரோடு கூட்டுச் சேர்வது என்பதில் விவஸ்தையே இல்லையா?" என்றார்கள்.

நான் சிரித்துக்கொண்டே "அரசியலில் இதெல்லாம் சாதரணம் அப்பா" என்றேன். பதவிக்கு முன்னால் போராளி என்ன, துரோகி என்ன, மோசடிக்காரர்கள் என்ன! எந்தவழியிலாவது பதவியை அடையவேண்டும் என்பதுதானே முக்கியம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் வாசகர்களே!

................

தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர்பட்டியல்வெளியாகிவிட்டநிலையில் அங்கு வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களில் ஜனநாயகக்கூட்டணியுடன்போட்டியிடசசிகலா மட்டுமல்ல வேறு ஒருவரும்கூட கடுமையாக முயற்சிசெய்துள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடக முதலாளியும் அரசியல்வாதியுமான அவர் தனக்கு வாய்ப்புத் தருமாறுகேட்டு திங்கட்கிழமை இரவு சட்டத்தரணி சிறீகாந்தாவைச் சந்தித்திருக்கிறார். ஜனநாயகக் கூட்டணியில் போட்டியிட தனக்கு வாய்ப்புத் தருமாறு கேட்டிருக்கிறார். நீங்கள் வந்தது சந்தோசம்தான் ஆனால், தனக்கு கிடைத்த இரு ஆசனங்களுக்கும் வேட்பாளர்களை நியமித்துவிட்டதனால் தன்னால் உதவ முடியாது என்று கைவிரித்த சிறீகாந்தா, எதற்கும் சுரேஸ் பிரேமச்சந்திரனுடன் பேசிப் பாருங்கள் என்று அனுப்பி வைத்திருக்கிறார்.

செவ்வாய்க்கிழமை காலையில் சுரேஸ் பிரேமச்சந்திரனைப் பார்த்துப் பேசியிருக்கிறார் அந்த ஊடக அரசியல்வாதி. சிலநாட்கள் முன்னராவது வந்திருந்தால் நிச்சயம் வாய்ப்புத் தந்திருப்போம் என்றுகூறிய சுரேஸ் தற்போது தனது கட்சியின் சார்பில் தான் போட்டியிடுவதுடன் மற்றொருவருக்கும் வாய்ப்புத் தருவதாக ஏற்கனவே வாக்குறுதி தந்துவிட்டதால் தன்னாலும் உதவ முடியாது என்றுகைவிரித்துவிட்டார். ரெலோதான்தனக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் ஒன்றை இன்னும் நிரப்பாமல் இருக்கிறது, வேண்டுமானால் முயற்சித்துப் பாருங்கள் என்றிருக்கிறார்.

ஆனால், ரெலோவிற்கு ஊடக முதலாளியை உள்ளே எடுப்பதில் விருப்பமில்லை என்று தெரியவந்தது. ரெலோவின் வேட்பாளரான சுரேன் குருசாமியும் ஊடக முதலாளியும் ஒரே தேர்தல் தொகுதியைச் சேர்ந்தவர்கள். ஊடக முதலாளியைக் களமிறக்கினால் அவர் தனது ஊடகப் பலத்தையும் வைத்து தனது வேட்பாளரையும் மேவி விடக்கூடும் என்ற அச்சமே அதற்குக் காரணம்.

இப்போது தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகக் கூட்டணி இரண்டிலுமே வாய்ப்பு மறுகப்பட்ட நிலையில் ஏற்கனவே தான் கட்டுப்பணம் செலுத்தி வைத்துள்ள சுயேச்சைக் குழுவில் போட்டியிடலாமா என்பது பற்றி தீவிரமாக ஆராய்ந்துகொண்டிருக்கிறாராம் ஊடக முதலாளி.

....................

தமிழ் அரசுக் கட்சியின் அதிருப்தி அணி சுயேச்சைக் குழுவாக 2024 தேர்தலில் போட்டியிடுவதற்கான தீவிர பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. வேட்பாளர்களைத் திரட்டுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. தமிழ் அரசுக் கட்சியில் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களை மட்டுமன்றி ஜனநாயகக் கூட்டணியில் கட்சித் தலைமைகளால் பழிவாங்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்களையும் இணைத்துக்கொண்டு சுயேச்சையாகக் களமிறங்குவது தொடர்பில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் சட்டத்தரணி தவராசா, உதயன் பத்திரிகை ஊடக முதலாளி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், புலம்பெயர் வர்த்தகரான சாவகச்சேரி அகிலன், மாமனிதர் ரவிராஜ்ஜின் மனைவி சசிகலா (அவர் இந்த அழைப்பை நிராகரித்துவிட்டு ஜனநாயகக் கூட்டணியில் வேட்பாளராகிவிட்டார்), மாவையரின் மகன் கலையமுதன், தீவகத்தில் நாவலன், தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர் சிறீதரன், ரெலோ விந்தன் ஆகியோருடன் பேசப்பட்டுள்ளது.

இந்த முயற்சி வெற்றிபெற்றால் களத்தில் இந்த சுயேச்சையும் போட்டியிடக் காணலாம்.

....................

மாவையர்கட்சித்தலைவர்பதவியிலிருந்து விலகியதாக அறிவித்திருக்கும் கையோடு சிறீதரனுக்கும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் சிறீதரனைக் கட்சியின் தலைவர் பதவியைப் பொறுப்பேற்குமாறு கேட்டுள்ளார். அவர் பதவியேற்க முடியாதவாறு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கும்போது அவர் எப்படி பதவியேற்க முடியும் என்று தெரியவில்லை. மாவையருக்கு என்ன ஆயிற்று என்பது ஆழமாக ஆராயப்படத்தான் வேண்டும்.

அவர் சிறீதரனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

மாவை சோமசுந்தரம் சேனாதிராஜா ஆகிய நான் இதுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து செயற்பட்டு வந்திருக்கின்றேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு 2024 ஜனவரி 21 நடைபெற்றபோது பொதுக் குழுவில் தாங்கள் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தீர்கள்.

தாங்கள் அந்த வகையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பை இன்னும் ஏற்கவில்லை. அதனால் நான் தொடர்ந்தும் கட்சியின் தலைவராகச் செயலாற்றி வந்துள்ளேன்.

அந்தப் பொறுப்பை உடன் ஏற்றுத் தலைவராகச் செயற்படுமாறு அன்றிலிருந்து பல தடவைகள் வற்புறுத்தி வந்துள்ளேன்.

2024 ஒக்டோபர் 7 இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பில் இருந்து விலகியிருக்கத் தீர்மானித்துள்ளேன் என்பதனை இந்தக் கடிதம் மூலம் அறியத் தருகின்றேன். எனவே, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பை உடன் ஏற்று நிறைவேற்றிச் செயற்படுமாறு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

கடிதத்தின் பிரதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

# இழப்பீட்டுத் தொகையைக் கட்டி முடித்த புலனாய்வுத்துறை முன்னாள் தலைவர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதிமன்றம் உத்தரவிட்ட இழப்பீட்டு தொகையில் எஞ்சியிருந்த 65 மில்லியனை செலுத்தியுள்ளதாக தேசிய புலனாய்வு சேவையின் முன்னாள் தலைவர் நிலாந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தனது சட்டத்தரணி ஊடாக அவர் இதனை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயப்பட்ட அடிப்படை மனுவை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் நிலாந்த ஜெயவர்த்தன 75 மில்லியன் ரூபாய்களைச் செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் முன்னர் 10 மில்லியன் ரூபாவினை செலுத்தியிருந்ததாக நிலாந்த ஜெயவர்த்தன தெரிவித்திருந்தார் தற்போது 65 மில்லியனை செலுத்தியுள்ள நிலையில் அவர் முழு இழப்பீட்டுதொகையையும் செலுத்தியுள்ளார்.

ஜனவரி 2023ஆம் திகதி உயர் நீதிமன்றம் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களிற்கு இழப்பீடாக அரசாங்கம் ஒன்று மில்லியனை செலுத்தவேண்டும் என உத்தரவிட்டிருந்தது.

2019ஆம் ஆண்டு தாக்குதலை தடுக்க தவறினார்கள் எனமனுவில் குறிப்பிடப்பட்டிருந்தவர்கள் மனுதாரர்களின் அடிப்படை உரிமையை மீறிவிட்டனர் என நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

# உலக வங்கியிடம் இருந்து மேலும் 200 மில். டொலர்



இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைக்கும் வகையில் உலக வங்கி குழுமத்தின் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் மேலும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவான ஒப்பந்தத்தில் கைசாத்திடும் நிகழ்வு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் இலங்கை அரசின் நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தன மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டேவிட் சிஸ்லேன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்த நிதி வசதியானது இலங்கையில் முன்னெடுக்கப்படும் விரிவான மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு உலக வங்கியின் தொடர்ச்சியான ஒத்துழைப்பை காண்பிக்கிறது என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது. இலங்கையின் மறுசீரமைப்பு, நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை சுமூக நிலைக்கு கொண்டு வருவதற்கான அபிவிருத்தி கொள்கைகளுக்கு நிதியளிக்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் இந்த நிதி உதவி இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இந்த இரு வருட வேலைத்திட்டங்களும் வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீதான தாக்கத்தை குறைத்து முழுமையான பொருளாதார நிலைத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்படுகிறது.

இந்த வேலைத் திட்டத்தின் முதல் கட்டம் 2023 ஆண்டில் செயற்படுத்தப்பட்டது. பிரதான மூன்று துறைகளின் கீழ் ஏழு வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்ட பின்னர், 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும்.

அதன்படி இந்த வேலைத்திட்டத்தின் பிரதான மூன்று அம்சங்களாக,

1.பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்தல் : நிதி நிலைத்தன்மையை பாதுகாத்து அரச வளங்கள் முகாமைத்துவம், நிதி ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை பலப்படுத்தல்

2. வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்தல்: மிகவும் போட்டித்தன்மை மிக்க தனியார் துறையுடன் இலங்கையின் அபிவிருத்தியை விரிவுபடுத்தல்

3. வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாத்தல்: நெருக்கடி மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல்.

உரிய நிதிவசதியை பெற்றுக்கொள்ள தகுதி பெற வேண்டுமெனில், ஆளும்தரப்பினால் மேற்குறிபிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் 9 வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட வேண்டிய அதேநேரம், அதற்கு உகந்த பொருளாதாரக் கொள்கை வரைவொன்றை பேணிச்செல்ல வேண்டியதும் அவசியமாகும்.

அதன்படி இந்த நிதி வசதியின் இரண்டாம் கட்டத்தைப்பெற்றுக்கொடுப்பதற்காகவும், உலக வங்கிச் சபையின் அனுமதி கிட்டியுள்ளதோடு, ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டதன் பின்னர் அது அமுலாகும்.

உலக வங்கியின் இந்த நிதி உதவி இலங்கையின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும் எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நெருக்கடி மீண்டும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் தீர்மானமிக்க செயற்பாடுகளை முன்னெடுக்க உதவும் என்பதோடு, நிலையானதும் போட்டித்தன்மை மிக்கதுமான சூழலை உருவாக்கும் என்றும் நம்பப்படுகிறது.

## பதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய கூட்டணியின் வேட்பாளராகக் கையொப்பம் இட்டார்.

தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களின் பெயர்கள் திங்கட்கிழமை இறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் கட்சியிலிருந்து விலகியுள்ளனர். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியி

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# சஜித்துக்கு முன்னர் ஆதரவளித்தவர்களே தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்தனர

## அவர்களுக்கு சு.க.வுடன் எவ்வித தொடர்பில்லலயாம்



ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துசஜித்பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தவர்களே தற்போது தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளனர். அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் எந்த பதவியையும் வகிக்கவில்லை என முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட்ட குழுவினரே தற்போது தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கப் போவதாகக் குறிப்பிடுகின்றனர். அவர்கள் சுதந்திர கட்சியில் எந்தவொரு பதவியையும் வகிக்கவில்லை.

நாம் பேச்சுகள் அனைத்தையும் நிறைவு செய்துள்ளோம். அதற்கமைய ஜனாதிபதித் தேர்தலைப் போன்று பொதுத் தேர்தலிலும் சமையல் எரிவாயு சிலிண்டர்சின்னத்தில்கூட்டணியில் போட்டியிடவுள்ளோம்.

விரைவில் எமது கூட்டணி வேட்புமனுவை தாக்கல் செய்யும். நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளிலும்வேட்பாளர்களைக் களமிறக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். பொதுத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மேலும் பலப்படுத்தி உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவோம். - என்றார்.(05)

# பொகவந்தலாவையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைதாகினர்

பொகவந்தலாவை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பிரைட்வெல் தோட்ட பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த இருவர் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 38 மற்றும் 42 வயதுடைய பொகவந்தலாவ பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளில் பொகவந்தலாவ பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது

அபுதாபியிலிருந்துஇலங்கைக்குசட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹியோவிட்ட பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய பெண் மற்றும் பாணந்துறை பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய ஆண் என இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான பெண்ணிடமிருந்து 24,200 சிகரெட்டுகளும் (121 கார்டூன்கள்) மற்றைய நபரிடமிருந்து 24,600 சிகரெட்டுகளும் (123 கார்டூன்கள்) பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# பீடி இலைகளுடன் ஒருவர் நுரைச்சோலையில் கைது



பீடி இலைகளை கடத்த முற்பட்ட சிலர் தப்பியோடிய நிலையில், ஒருவர் ஞாயிற்றுக்கிழமை நுரைச்சோலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் நுரைச்சோலை இழந்தையடி கரையோரப் பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் இவரிடமிருந்து சுமார் 2500 கிலோ பீடி இலைகள், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி மற்றும் வான் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த பீடி இலைகள் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியானவை எனக் கூறப்படுகிறது.

பீடி இலைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி, வான் ஆகியன கட்டுநாயக்க சுங்க திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# உழவு இயந்திரம் – கனரக வாகனம் மோதிய விபத்தில் ஒருவர் இறப்பு



உழவு இயந்திரத்துடன் கனரக வாகனம் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம்அம்பாறைமாவட்டம்சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்முனை அம்பாறை பிரதான வீதியில் அமைந்துள்ள மல்வத்தை பள்ளிவாசலுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதுடன் குறித்த விபத்தில் சம்மாந்துறை விளினியடி 03 பகுதியை சேர்ந்த அசனார் முகம்மட் இஸ்மாயில் (வயது 64) என்பவர் சம்பவ இடத்திலே மரணமடைந்துள்ளார். அத்துடன் மற்றுமொருவர்காயமடைந்துநிலையில் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



குறித்தவிபத்தானது உழவுஇயந்திரம் வயலை உழுது விட்டு வீடு திரும்பும் வழியில் இடம்பெற்றுள்ளதுடன் உழவு இயந்திரத்துடன் மோதிய கனரக வாகனத்தின் சாரதி சம்மாந்துறை பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்தில் மரணமடைந்தவரின் சடலம் அம்பாறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இணையம் மூலம் மோசடி செய்த 40 வெளிநாட்டவர்கள் கைது

## கம்பஹாவில் சம்பவம்

கம்பஹாவில் உள்ள ஹோட்டல் மற்றும் ஹன்வெல்லவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் இணையம் மூலம் மோசடி செய்த 40 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 30 சீனர்கள், 4 இந்தியர்கள் மற்றும் 6 தாய்லாந்து பிரஜைகள் அடங்குகின்றனர். .

தடயவியல் பரிசோதனைக்காக 499 மொபைல் போன்கள், 25 மடிக்கணினிகள் மற்றும் 29 டெஸ்க்டாப் கணினிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பலவீனமான ஒற்றுமை

2024 நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் தேசியம் பேசும் கட்சிகளின் மிகப் பலவீனமான ஒற்றுமைக் குரலை மீண்டும்ஒருதடவைஅம்பலப்படுத்தியுள்ளது. கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமை என்பது கொள்கையின் பாற்பட்டதாக அமையவேண்டுமே தவிர, தேர்தல் கூட்டுக்குப் பெயர் ஒற்றுமையல்ல என்பதை நாம் இதற்கு முன்னரும் பல தடவைகளில் வலியுறுத்தியுள்ளோம். ஆனால், தேர்தல்வெற்றிகளுக்கானகூட்டைமட்டும்தான் ஒற்றுமை என்று தமிழ்த் தேசியத்தை வாயளவில் பேசிவரும் கட்சிகள் கருதுகின்றன என்பதை இந்தத் தேர்தல் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்தத்தேர்தலிலும்தொடக்கத்தில்ஒற்றுமைக்கோசம் முன்வைக்கப்பட்டது. தமிழர்களின் இருப்புக்கு ஒற்றுமை அவசியம்என்றுமுழங்கினார்கள். கடந்தஅரசுத்தலைவர் தேர்தலில்இந்தமுழக்கம்இன்னும்உரத்ததாகஇருந்தது. தமிழ்த் தேசத்தின் திரட்சிக்காக ஒற்றுமை அவசியம் எனப் பறைசாற்றப்பட்டது. ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் வந்தபோது யாரும் அந்த ஒற்றுமைக்கு உண்மையான பொருளைச் சிந்திக்கவில்லை. கட்சிகள் ஒன்றையொன்று பலவீனப்படுத்தவும், மற்றக் கட்சிகளில் இருந்து வேட்பாளர்களைத் தம் பக்கம் இழுத்தாவது தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்ற கேவலமான சிந்தனையை உடைய இந்தக் கட்சிகளே தமிழ் மக்களுக்கு ஒற்றுமையைப் போதிக்கின்றன என்பது சாபக்கேடு.

கட்சிகளுக்கு இடையில் மட்டுமல்ல கட்சிகளுக்கு உள்ளேயும் நாடாளுமன்றக் கதிரைகளுக்காக அடிபடுபவர்களேஒற்றுமைகுறித்துஓங்கிஒலிக்கிறார்கள். ஆனால், தேர்தலில் தமக்கு இடம் கிடைக்கவில்லை என்றால் கட்சியைப் பிளவுபடுத்துவது குறித்தோ, சொந்தக் கட்சிக்கு எதிராகவே தேர்தலில் மற்றக் கட்சிகளுடன் சேர்ந்தோ அல்லது சுயேச்சையாகவோ போட்டியிடுவதுகுறித்தோஅவர்கள்கவலைப்படுவதில்லை. வென்றுவிட்டால் தாமே தன்னிகரில்லாத் தலைவர் என்பார்கள். தோற்றுவிட்டால் மீண்டும் ஒற்றுமைக் கோசத்தைக் கையில் எடுப்பார்கள்

இவர்களின் ஒற்றுமை, தேசத் திரட்சிக்கான ஆயுள்காலம் இவ்வளவுதான். இதை நம்பி தமிழ் மக்கள் ஏமாந்து போகாமல் இருக்கக் கடவீராக. தமிழர்களின் இருப்புக்கு ஒற்றுமை முக்கியம்தான். தேசத் திரட்சி முக்கியம்தான், தேசியக் கட்டுமானம் தேவைதான். அது, அற்பத்தனமாக பதவிக்கு அடிபடும் கட்சிகளதும் அரசியலாளர்களதும் போலி ஒற்றுமையிலும் போலித் தேசியத்திலும் கட்டமைக்கப்படமுடியாதது என்பதில் மக்கள் தெளிவடையவேண்டும்.

கட்சிகள் பதவிக்காகத்தான் செயற்படும் என்பதில் தெளிந்து, அப்படிப்பதவிக்காகச்செயற்படும்நிலையிலும் கட்சிகள் தமிழ்த் தேசியம், தமிழர் உரிமை அரசியல் என்கிற பாதையில் இருந்து விலகிச் செல்லாமல் இருப்பதற்கு அவற்றை வழிப்படுத்துவதற்கு வாக்குகள் எனும்ஆயுதத்தை மக்கள் நன்கு சிந்தித்துப் பயன்படுத்த வேண்டும். மக்கள் சிதறிப் போயிருக்கும் வரை, அற்ப நலன்களுக்காக யாரை வேண்டுமானாலும் ஆதரிக்கலாம் என்று நினைக்கும்வரை கட்சிகளும் அதன் பிரதிபலிப்பாகத்தான் இருக்கும் என்பதையும் மறந்துவிடக்கூடாது. மக்களேதான் சிந்திக்கவேண்டும்.



# ஓராண்டில் காசா போர் : உலகறிந்த இஸ்ரேலின் கொடூரங்கள்

## சுதந்திர பாலஸ்தீனமே இறுதித் தீர்வு

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

கடந்த ஓராண்டில், இஸ்ரேலிய ஆட்சியின் உண்மையான தன்மையை உலகம் கண்டுள்ளது. காசாவில் இஸ்ரேல் எவ்வாறு கொடூரங்களை நிகழ்த்துகிறது என்பதை உலகம் தற்போது ஆதாரபூர்வமாக கண்டுள்ளது.

**உலகறிந்த இஸ்ரேலின் கொடூரங்கள்:**

பன்னிரு மாதங்களில் 45,000க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை - பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகளை - கொடூரமாக இஸ்ரேல் கொன்றுள்ளது.

இஸ்ரேலின் தலைவர்கள் இந்த இனப்படு கொலையை, குழந்தைகளைக் கொல்வதை, போர்க் குற்றங்களை மற்றும் அரசு பயங்கரவாதத்தை சட்டப் பூர்வமான தற்காப்பு என்று அழைக்கின்றனர்.

அவர்கள் மருத்துவமனைகள், குழந்தைகள் பள்ளிகள் மற்றும் பள்ளிகளை சட்டப்பூர்வமான இராணுவ இலக்குகள் என்றும் அழைக்கின்றனர்.



உலகெங்கிலும் உள்ள சுதந்திரத்தை நேசிக்கும் மற்றும்துணிச்சலானமக்களை, இனப்படுகொலைக்கு எதிரான அவர்களது போராட் டத்தை 'யூத எதிர்ப்பு' என்றும் இஸ்ரேல் முத்திரை குத்துகின்றது.

ஏழு தசாப்தங்களாக ஆக்கிரமிப்பு மற்றும் அவமானத்திற்கு எதிராக எழுந்து நின்ற ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்களை அவர்கள் எப்போதும் பயங்கரவாதிகள் என்றே அழைக்கின்றனர்.

**உலகத்தையே புரட்டிப்போட்ட ஹமாஸ் தாக்குதல் :**

2023 அக்டோபர் 7, காலை 6.29-உலகத்தையே புரட்டிப்போட்ட சம்பவம் ஒன்று நடந்தது. அந்த நாளில்தான், காசாவில் இருந்து ஹமாஸ் படையினர் இஸ்ரேல் மீது ராக்கெட் தாக்குதல் நடத்தினர். இருபது நிமிடங்களில் 5,000 ராக்கெட்கள் சீறிப் பாய்ந்தன. இதில் 1,200 பேர் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதல் நடந்து ஓராண்டு ஆகிறது. மத்திய கிழக்கில் போர் மேகங்கள் கலைவதாக இல்லை. மாறாக, தீவிரமாகிக் கொண்டே போகிறது. தற்போது லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

மத்திய கிழக்கு நாடுகளை கதி கலங்க வைத்த, இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய முதல் தாக்குதலுக்கு முந்தைய நாள் வரை, இப்படி நடக்கும் என யாருமே உணரவில்லை. உலகின் மிகச் சிறந்த உளவு அமைப்புகளில் ஒன்றாக கருதப்படும் மொசார்ட் இந்த விஷயத்தில் கோட்டை விட்டு விட்டது. இது எப்படி நடந்தது என்றே தெரியவில்லை என்பதுதான் உளவு அமைப்பின் பதிலாக இருந்தது. அந்த தாக்குதலின்போது கொல்லப்பட்டவர்கள் தவிர, சுமார் 250 இஸ்ரேலியர்களை பிணைக் கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்றனர்.

அதன் பின்னர் நவம்பரில் குறுகிய கால போர் நிறுத்தத்தின்போது பாதிப்பேர் விடுவிக்கப்பட்டனர். மீதிப்பேர் பற்றிய தகவல் இல்லை. அவர்கள் இறந்திருக்கலாம் என கருதப்படுகிறது. கடந்த ஓராண்டில் எண்ணற்ற தாக்குதல்கள், மரணங்கள் அங்கே நிகழ்ந்திருக்கின்றன.

**போரும் இரத்தக்களரியும்:**

இன்றைய உலகில் நாம் காணும் போர்கள் மற்றும் இரத்தக்களரியின் வேர்கள்ஆக்கிரமிப்பாளர்கள் மற்றவர்களின் உரிமைகளை மீறியுள்ளனர். நாடுகளின் உரிமைகளை புறக்கணித்தது, பாகுபாடு மற்றும் சமத்துவமின்மையை அமல்படுத்தியுள்ளனர். குறிப்பிட்டகுழுக்களை பலவீனமாகவும் வளர்ச்சியடையாமலும் வைத்தருந்தது மற்றும் தனிநபர்களின் உரிமைகளை புறக்கணித்தது ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் இல்லை எனலாம்.

அநீதி, ஒடுக்குமுறை, பேராசை, வறுமை மற்றும் அறியாமை ஆகியவை எந்தவொரு பகுதியிலும் நிலவும் வரை, வன்முறையும் மோதலும் தொடரும். இத்தகைய குழப்பங்களின் மூல காரணங்களை நாம் எதிர்கொள்ளாவிட்டால், நமது குழந்தைகளின் எதிர்காலத்தை இருளில் இருந்தும் அழிவில் இருந்தும் காப்பாற்ற முடியாது.

தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் அதிகரிக்கும் பதற்றத்தால் மூன்றாம் உலகப்போர் மூளுமா என்ற ஐயமும் எழுந்துள்ளது. ஈரானின் பதிலடியால் அடுத்தடுத்த கட்டங்களை நோக்கி நகரும் இஸ்ரேல் வியூகம் அமைக்கின்றமை பாரிய அழிவை நோக்கி செல்லவுள்ளது.

**பாலஸ்தீன எழுச்சியில் ஹமாஸ்:**

இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம் என்பதன்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஓராண்டில் காசா போர் .....

4ம் பக்க தொடர்ச்சி..........



சுருக்கம் தான் ஹமாஸ். மேற்கு கரையையும் காசா நிலப்பகுதியையும் ஆக்கிரமிக்கும் இஸ்ரேலின் முயற்சிக்கு எதிரான முதல் பாலஸ்தீன எழுச்சி தொடங்கிய பின், 1987ல் ஹமாஸ் உருவானது.

2005ல் காசாவில் இருந்து இஸ்ரேலிய படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு ஹமாஸ் அரசியலில் இறங்கியது. 2006ல் பாலஸ்தீன தேர்தலில் வெற்றி பெற்றது. அதிபர் முகமது அப்பாசின் பதா இயக்கத்துடனான மோதலை தொடர்ந்து அரசியலில் இருந்து வெளியேற்றப்பட்ட காசாவிலேயே அவர்கள் அரசியலில் வெற்றி பெற்றனர்.

அதன் பின்னர் இஸ்ரேலுடன் மூன்று பெரிய போர்களில் காசா ஈடுபட்டுள்ளது.

முதலில் காசா, தற்போது லெபனான்

அடுத்தது என்ன நடக்கும் என்ற பதற்றம் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களை கதி கலங்க வைத்திருக்கிறது. முதலில் காசா, அடுத்தது லெபனான், தற்போது ஏமன் என இஸ்ரேலின் தாக்குதல் தொடர்ந்து விரிவடைந்து வருகிறது.

அதாவது, காசாவில் இஸ்ரேலிய தாக்குதலை தொடர்ந்து, லெபனானில் ஹிஸ்புல்லா மற்றும் அதன் தலைவர்களுக்கு எதிரான இஸ்ரேலின் சமீபத்திய தாக்குதல்கள், இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய பெரிய ஏவுகணை ஆளில்லா விமானத் தாக்குதல்கள் போர் பகைமையை அதிகரித்துள்ளது.

**லெபனான் தரை வழி தாக்குதல் :**

தற்போது லெபனான் மீது இஸ்ரேலிய தரை வழி தாக்குதலும் தொடங்கி விட்டது. இதற்கு ஈரான் பதிலடி கொடுக்க துவங்கி விட்டது. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போர் இப்போதைக்கு முடிவடையாது என்பது ஈரான் பதிலடி மூலம் நிரூபணம் ஆகி விட்டது.

தலைநகர் டெல் அவிவ், ஜெருசலேம் உட்பட இஸ்ரேலின் அனைத்து பகுதிகளையும் குறிவைத்து இந்த ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஈரான் இதற்கு தகுந்த விலை கொடுக்க வேண்டி வரும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது. ஈரான் ஏவுகணைகளை இடைமறித்து தாக்க அமெரிக்கா உதவியுள்ளது.

இந்த சண்டையில் அமெரிக்கா தலையிட வேண்டாம் என ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி எச்சரிக்கை விடுத்துள்ளார். இருப்பினும், இஸ்ரேலின் முக்கிய நட்பு நாடான அமெரிக்கா, இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க உறுதி அளித்துள்ளதுடன் ஆயுதங்களையும் வழங்கியுள்ளது.

ஹிஸ்புல்லாவுக்கு பின்னணியில் இருந்த ஈரான் நேரடியாக களம் இறங்கிய நிலையில், ரஷ்யா ஈரானுக்கு உதவிக்கு களம் இறங்கலாம்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பதிலாக நட்பு நாடுகள் இருதரப்பிலும் கைகோர்க்க துவங்கினால், மூன்றாம் உலகப்போர் மூளுவும் வாய்ப்பு இருக்கலாம் எனவும் சில ஊகங்களாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய கவுன்சில் தலைவர் சார்லஸ் மைக்கேல், ஐநா சபையில் சில தினங்கள் முன்பு ஆற்றிய உரையில் , மூன்றாம் உலகப்போர் மூள வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்துள்ளார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

**சுதந்திர பாலஸ்தீனமே தீர்வு :**

காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்கினாலும், சர்வதேச அரங்கில் இஸ்ரேல் தோல்வியடைந்துவிட்டது. தனது காட்டுமிராண்டித்தனமான வன்முறையால் இஸ்ரேல் எதையும் சாதிக்க முடியவில்லை. இயல்பாகவே, கடந்த சில நாட்களாக லெபனானில் இஸ்ரேல் நடத்திய அரசு பயங்கரவாதம், தொ டர்ந்து ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வைப் பறித்துள்ளது.

இதற்கு பதிலடி இல்லாமல் போக முடியாது. இந்த பயங்கர பேரழிவை முடிவுக்குக் கொண்டுவர உலகளாவிய முயற்சிகளை முறியடித்த, மனித உரிமைகளின் காவலர்கள் என்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்ளும் கொடியவர்கள்தான் அனைத்து விளைவுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

மேற்கு ஆசியாவிலும் உலகிலும் 70 ஆண்டு கால மோதலை முடிவுக்குக் கொண்டுவர ஒரே வழி அனைத்து பாலஸ்தீனர்களின் சுயநிர்ணய உரிமையை மீட்டெடுப்பதுதான்.

பாலஸ்தீனத்தின் அனைத்து மக்களும் - தாய்நாட்டில் வசிப்பவர்களும், புலம்பெயர்ந்தவர்களும் - தங்கள் எதிர் காலத்தை தீர்மானிக்க வேண்டும்.

இந்த வழிமுறையின் மூலம் நிலையான அமைதியை அடைய முடியும்.

இனவாதம் மற்றும் இனவெறியின்றி முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள் ஒரே நிலத்தில் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ முடியும் என்பதே தீர்வாகும்.





### பணத்தை திருடினார் என குற்றஞ்சாட்டி

# நடத்துநரை மரத்தில் கட்டிவைத்து அடித்த பேருந்து உரிமையாளர்



தனியார் பஸ் ஒன்றில் பணத்தை திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட நடத்துநரை தனியார் பஸ் உரிமையாளர் தென்னை மரத்தில் கட்டிவைத்து அடித்து சித்திரவதை செய்த சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஓந்தாச்சிமடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது -

களுவாஞ்சிக்குடி மகிளூர் பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் பஸ் உரிமையாளரின் கல்முனை - மட்டக்களப்பு போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவரும் பஸ்ஸில் நடத்துனராக அம்பாறை மத்திய முகாம் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது இளைஞர் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், அந்த பஸ்ஸில் இருந்து பணத்தை திருடியதாக நடத்துநர்மீது தனியார் பஸ் உரிமையாளர் குற்றஞ்சாட்டி கடமையிலிருந்த இளைஞரை நேற்று பகல் ஓந்தாச்சிமடம் பிரதான வீதியிலுள்ள பாழடைந்த காணியொன்றுக்குள் இழுத்துச் சென்று அங்கிருந்த தென்னை மரத்தில் கட்டிவைத்து கட்டையால் தாக்கி சித்திரவதை செய்துள்ளார்.

இதனைக் கண்ட பொதுமக்கள் கடும் கவலை தெரிவித்து, பொலிஸாருக்கு அறிவித்த நிலையில், சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

அதன் பின்னர், மரத்தில் கட்டிவைத்து அடித்தவரை அங்கிருந்து பொலிஸார் அப்புறப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கான அறிவித்தல்

### தேர்தல் ஆணைக்குழு விடுத்தது

*எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு பெயர் குறித்த நியமனங்களைக் கையளிக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளதும் சுயேச்சைக் குழுக்களதும் அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு முக்கிய அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.*

*இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படுவதாவது,*

*2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 80(1)(). 82(1) (ஊ), 82(2), 89, 90(4) ஆம் பிரிவுகளின்படி தேர்தல் தினம் பிரகடனம் செய்யப்பட்ட தினத்தில் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களை உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு பெயர் குறித்த நியமனப்பத்திரங்களுடன் ஒப்படைக்க வேண்டும்.*

*அதேபோல், 99அ பிரிவிற்கிணங்க தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான வேட்பாளர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களை பெயர் குறித்த நியமனப் பத்திரங்களுடன் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்க வேண்டும்.*

*பெயர் குறித்த நியமனப்பத்திரத்துடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களை ஒப்படைக்கத் தவறுதல் தண்டனைக்குரிய ஒரு குற்றம் என இந்த அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*(05)*

# விசேட தேவையுடைய வாக்காளர்கள் தொடர்பில் வெளியாகியுள்ள தகவல்

*தேர்தலின்போது விசேட தேவையுடைய வாக்காளர்களுக்கு வாக்களிப்பு நிலையங்களில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக்கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை உடன் அழைத்துச் செல்ல சட்ட ரீதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவிக்கையில் -*

*அவ்வாறு உடன் அழைத்துச் செல்லும் உதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டும் என்பதோடு அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் அல்லாதவராகவும் இருக்க வேண்டும்.*

*மேலும், உதவியாளர் ஒருவரோடு வருகைதருவதற்கும் இயலாத வாக்காளர்கள், பழைய முறைப்படி வாக்கெடுப்பு நிலைய அலுவலர் ஒருவரின் முன்னிலையில் தலைமை தாங்கும் அலுவலர் ஊடாக தனது வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக்கொள்வதற்கு வசதிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*(05)*

# தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்

*எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில், தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து அரசமற்றும்நியதிச்சட்ட சபைகளின் அலுவலர்களும் அல்லது ஊழியர்களும் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்க வேண்டும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவிக்கையில் -*

*தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்காமல் இருத்தல் அல்லது குறைபாடுகள் காரணமாக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படல் போன்ற காரணங்களுக்காக அரச மற்றும் நியதிச்சட்ட சபைகளின் அலுவலர்கள் அல்லது ஊழியர்கள் தேர்தல் கடமைகளிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள்.*

*மேலும், தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்படாத அரச மற்றும் நியதிச்சட்ட சபைகளின் அலுவலர்கள் அல்லது ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கத் தகைமை பெற மாட்டார்கள் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*(05)*

# தொலைக்காட்சி நாடக நடிகர் போதைப்பொருளுடன் கைது

ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த தொலைக்காட்சி நாடக நடிகர் ஒருவர் பொலிஸாருக்கு 10 லட்சம் ரூபாய் இலஞ்சம் வழங்கி தப்பிச் செல்ல முற்பட்ட வேளை தனமல்வில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 26 வயதுடைய தொலைக்காட்சி நாடக நடிகர் ஆவார்.

சந்தேக நபர் வெல்லவாய நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் ஒக்ரோபர் 11 ஆம் திகதி வரை மேலதிக விசாரணைகளுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபர் தன்னை கைது செய்யாமல் இருக்க தனமல்வில தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.பி பண்டாரவுக்கு 10 லட்சம் வழங்க முற்பட்டுள்ளார்.

இந்நிலையில், தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வழங்கிய தகவலின் பேரில் பொலிஸ் அதிகாரி குழு ஒன்று பலஹருவ பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட போது 10,300 கிராம் ஐஸ் போதைப்பொருடன் சந்தேக நபரை கைது செய்துள்ளது.

இதேவேளை, தலைமன்னார் பகுதியில் 40 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுப்பட்டமை தொடர்பில் சந்தேக நபருக்கு எதிரான வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், அவருக்கு எதிரான சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தனமல்வில தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.பி பண்டாரவின் கீழ் பொலிஸ் குழுவொன்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (05)

# தாமரைக் கோபுரத்தில் இருந்து கீழே வீழ்ந்து மாணவி இறப்பு

கொழும்பு, தாமரைக் கோபுரத்தில் இருந்து கீழே வீழ்ந்து மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த மாணவியின் பாடசாலைப் பை, காலணிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவி தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# குளியாப்பிட்டிய பன்னல வீதியில் கோர விபத்து



குளியாப்பிட்டிய - பன்னல வீதியில் நுகவெல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தில் மற்றும் கொங்கிரீட் பாறையில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, காரின் சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(05)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தலைவர் பதவி விலகினார்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க விஜேரத்ன தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிடம் கையளித்துள்ளார்.

நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிப்பதாக நீதிமன்றால் நடத்தப்பட்ட விசாரணையின் போது ஜனாதிபதியின் சட்டத்தரணி உதித இகலஹேவா தெரிவித்தார்.

இலஞ்சஊழல்ஆணைக்குழுவின்பணிப்பாளர்நாயகத்தை நியமிப்பது தொடர்பில் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(05)

# அம்பாறை கழிவு மறுசுழற்சி நிலையம் அருகில் இறந்து கிடந்த யானை தொடர்பில் விசாரணை

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்தின் அருகில் இறந்து கிடந்த யானை தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை குறித்த யானை அப்பகுதியில் குவிந்துள்ள குப்பைகளை உண்ட நிலையில் திடீரென உயிரிழந்துள்ளது.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன்யானையின்இறப்புக்கானகாரணம் என்ன என்பது தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை என்பதுடன் வனஜீவராசிகள்திணைக்களம் குறித்தயானையின் மரணம் தொடர்பான காரணத்தை உடற்கூற்று மருத்துவ பரிசோதனையின் பின்னரே அறிய முடியும் எனத் தெரிவித்துள்ளனர். மேலும், இப்பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை உண்பதற்காக தினந்தோறும் 10 இற்கும் மேற்பட்ட யானைகள்வருகைதருவதுடன்அருகில் உள்ளபொதுமக்களின்உடைமைகளுக்கும்சேதம் விளைவிக்கின்றதுடன் அம்பாறை நகரப்பகுதி உள்ளிட்ட ஏனைய புற நகர பிரதேசங்களில் இருந்து இப்பகுதிக்கு குப்பைகளை மாநகர மற்றும் பிரதேச சபையின் வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு கொட்டப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பெருமளவான காட்டு யானைகள் குப்பை மேடுகளை தேடி உணவுக்காக வருகின்றன. தாவர உண்ணியான காட்டு யானைகள் குப்பைகள் பொலீத்தீன்கள் பிளாஸ்ரிக் பொருள்கள் உள்ளிட்ட கழிவு பொருள்களை உட்கொள்வதால் யானைகளின் இறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது. யானை நாளொன்றுக்கு சுமார் 150 கிலோ உணவை உட்கொள்வதாகவும் 160 லீற்றர் தண்ணீரையும் குடிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(05)

# விரும்பத்தகாதவர்களை வேட்பாளர்களாக நியமிக்காதீர் என்கிறது பவ்ரல் அமைப்பு

நீதிமன்றம் குற்றவாளிகள் என தீர்ப்பளித்தவர்களை நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர்களாக நியமிக்கவேண்டாம் என தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீதிமன்றத்தால் ஊழல் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தண்டனை விதிக்கப்பட்டவர்களை வேட்பாளர்களாக நியமிப்பதை அரசியல் கட்சிகள் நியமிக்க கூடாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வோரை வேட்பாளர் பட்டியலில் சேர்த்தால் குறிப்பிட்ட அரசியல்கட்சிகள் பொதுமக்களிற்கு பதில்சொல்லவேண்டியிருக்கும் என அவர் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் வன்முறையற்ற விதத்தில் இடம்பெற்றுள்ள சூழ்நிலையில் அரசியல் கட்சிகளை சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பட்டியல் வேட்பாளர்களாக நியமிப்பதற்கு தகுதியானவர்களை அரசியல்கட்சிகள் தெரிவு செய்யவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பட்டியலில்ஒரு வேண்டத்தகாத வேட்பாளர் நியமிக்கப்பட்டாலும் அது ஒட்டுமொத்த கட்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

விரும்பத்தகாத அரசியல்வாதிகள் மீண்டும் தெரிவு செய்யப்படுவதை தவிர்க்கும் விதத்தில் மக்கள் வாக்களிக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(05)

# வெலிப்பன்னயில் தம்பதி உயிரிழப்பில் சந்தேகம்

வெலிப்பன்ன பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த தம்பதியின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என வெலிப்பன்ன பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிப்பன்ன பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(05)



## பதவி....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

டுவதற்கு இவர்கள் இருவருக்கும் இடமளிக் கப்பட்டிருக்கவில்லை. இதில் தான் போட்டியிடப்போவதில்லை என்று மாவை -முன்னரே அறிவித்திருந்தார். எனினும் சசிகலாவிற்கு வாய்ப்பு வாங்கிக் கொடுப்பதற்கு அவர் கட்சியின் தேர்தல் நியமனக் குழுவில் முயற்சிசெய்தார். இ-ருப்பினும்நியமனக்குழு அவரது கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

இதனையடுத்து நேற்றுக் காலை கட்சி தாவிய சசிகலா, தான் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டார் என்றுபுளொட்தலைவர்சித்தார்த்தனின்வீட்டில் வைத்து அறிவித்தார். அத்தோடு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட வேட்புமனுவிலும் கையெழுத்திட்டார். தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட வாய்ப்புக் கேட்ட அதேநேரத்தில் ஜனநாயகக் கூட்டணியுடனும் அவர் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்காகவே கூட்டணியின் வேட்பாளர்கள் 8 பேர் தெரிவு செய்யப்பட்டபோதும் 9 வேட்பாளர் விவரம் அறிவிக்கப்படாமல் இருந்தது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மாவை சேனாதிராசா தனது தலைவர் பதவியிலிருந்து விலகுகிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றபோதும் அது குறித்த கடிதம் தனக்கு நேற்று மாலை வரையில் கிடைக்கவில்லை என்று கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் தெரிவித்தார். ''தலைவர் பதவி விலகிவிட்டார் என்ற செய்தியை நானும் அறிந்தேன். ஆனால் அவர் அனுப்பிய கடிதம் எதுவும் எனக்கு இதுவரையில் கிடைக்கவில்லை'' என்றார் சத்தியலிங்கம்.

சேனாதிராசா அனுப்பியதாகக் கூறப்படும் கடிதத்தில் அவரது பதவி விலகலுக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. அதேநேரம், தனக்குப் பின்னர் கட்சியின் தலைவர் பொறுப்பை உட்கட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற சிறீதரன் அல்லது சிரேஸ்ட துணைத் தலைவர் சிவஞானம் ஏற்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

தான் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேறி ஜனநாயகக் கூட்டணியுடன் சேர்வதற்கு வேட்பாளர் வாய்ப்புத் தரப்படாததே காரணம் என்பதை சசிகலா செய்தியாளர்களிடம் உறுதிப்படுத்தினார். வேட்பாளர் படிவத்தில் கையெழுத்து வைத்த பின்னர் பேசிய அவர், ''எனக்கு மட்டுமல்லாது கட்சியின் நீண்ட கால உறுப்பினர்கள் பலருக்கும் வேட்பாளர் நியமனம் கொடுக்காமல் தனக்குத் தேவையானவர்களுக்கே சுமந்திரன் நியமனம் கொடுத்துள்ளார்'' என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

## கோட்டாவைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்றும் நோக்குடன் வரவில்லை எனவும் அவரை கொலை செய்வதே அவர்களின் நோக்கமாக இருந்ததை நான் நன்கு அறிந்திருந்தேன்.

அவ்வாறுவருகைதந்தவர்கள்தொடர்பான அனைத்துதகவல்களும்என்னிடம்உள்ளது. எனவேதான் தற்போதைய ஆளும்தரப்பு பழிவாங்கல் நோக்குடனேயே என்னை இன்று குற்றப்புலனாய்வுதிணைக்களத்துக்கு விசாரணைகளுக்காக அழைத்துள்ளது - முன்னாள்ஜனாதிபதிகோட்டாபயராஜபக்சவின் முன்னாள் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார மேலும் தெரிவித்தார்.

## இலஞ்ச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனத்திற்குஎதிராகஊடகவியலாளர்ருவினி பொன்சேகா மற்றும் ட்ரான்ஸ்ஃபெரன்ஸி இன்டர்நேஷனல் நிறுவனம் தாக்கல் செய்த மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சார்பில்ஆஜரானஜனாதிபதிசட்டத்தரணிஉதித இகலஹேவா இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

இந்தமனுஉயர்நீதிமன்றநீதியரசர்களான ப்ரீதி பத்மன் சுரசேன, ஜனக் டி சில்வா மற்றும் குமுதினி விக்ரமசிங்க ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவின் பிரதிவாதிகளாக இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சிலர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்கவிஜயரத்னவின்நியமனம்,சட்டத்திற்கு முரணான வகையிலும் அரசமைப்பிற்கு முரணான வகையிலும் அமைந்துள்ளதால் அந்த நியமனத்தை நிறுத்துமாறு கோரி மனுதாரர்கள் கோரி இருந்தனர்.

தமது சேவைபெறுநர் மீண்டும் நீதிமன்ற சேவையில் இணைந்து கொள்வதற்கு ஆர்வமாக உள்ளதால் தமது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார் என்று இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க விஜேரத்ன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உதித இகலஹேவா மன்றில் சுட்டிக்காட்டினார்.

இந்த நியமனத்தினால் தமது சேவைபெறுநர்கள் உள்ளிட்ட நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணிகள் எடுத்துரைத்தனர்.

இரு தரப்பு விடயங்களையும் ஆராய்ந்த நீதிமன்றம் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கியது. மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான விரான் கொரியா மற்றும் சாலிய பீரிஸ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

சட்ட மா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி விராஜ் தயாரத்ன ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இ.தொ.கா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜீவன் தொண்டமானுக்கு நேற்று மாலை அனுப்பி வைத்துள்ளார்.

மக்களினதும், கட்சி அங்கத்தவர்களினதும் எதிர்பார்ப்புகளை மீறி எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்த நாட்டினை வங்குரோத்து நிலைக்கு அடைய செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தங்களது சுயநல அரசியலுக்காக கண்டி மக்களை அடகு வைத்த உறுப்பினர்களோடு இணைந்து தாம் போட்டியிடத் தயார் இல்லை எனவும், கட்சியின் தீர்மானத்திற்கு அமைவாக மக்களின் எதிர்பார்ப்புக்கு அப்பால் தன்னால் செயல்பட இயலாது என்பதன் காரணமாக இந்த முடிவை தான் எடுத்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள்தன்மீதுவைத்துள்ளநம்பிக்கையை ஒரு போதும் இலங்கை தொழிலாளர் காங்கிரசுடனும், அதன் தலைமையை விமர்சித்த தலைமைகளோடு சேர்ந்து தான் தேர்தல் கேட்பதன் மூலம் வீணடிக்கத் தயார் இல்லைஎனவும்தெரிவித்தேஇப்பதவிவிலகல் கடிதத்தை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

மக்களின் நலனுக்காகக் கட்சித் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டுமே தவிர சில தனி நபர்களின் வளர்ச்சிக்காக மாத்திரமே கட்சி முடிவுகளை எடுக்கக்கூடாது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கட்சியின் அடிப்படை உறுப்பினராக தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றியுள்ளதுடன், கட்சியின் இளைஞர் அணி உருவாக்கம் மற்றும்கட்சியினுடையசர்வதேசதொடர்புகள், கண்டியில் இ.தொ.காவின் வளர்ச்சி என்பவற்றில்தனது அளப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளார் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## வரி நிலுவையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது இந்த வருடத்தில் இலக்கிடப்பட்ட வருமானத்தின் 70 சதவீதமாகும். எனவே, வரி செலுத்தாத நபர்களை அடையாளம் கண்டு, அவர்களிடமிருந்து வரிகளை வசூலிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

## யாழ்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்யப்பட்டது.

இதேவேளை வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ''வடக்கின் இரண்டு தேர்தல் மாவட்டங்கள், கிழக்கில் மூன்று மாவட்டங்கள் கொழும்பு உள்ளடங்களாக ஒன்பது மாவட்டங்களில் இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் ஈ.பிடி.பி. தனது சின்னமான வீணைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது'' - என்றார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் கொழும்பில் இம்முறை ஈ.பி.டி.பி. போட்டியிடுவதற்கு விசேட காரணங்கள் ஏதும் உண்டா? என்று கேட்டனர்.

கொழும்பிலுள்ள எமது கட்சியின் ஆதரவாளர்கள்கொழும்பிலும்போட்டியிடுமாறு கோரிக்கைவிடுத்துவந்திருந்தனர். அவர்களது கோரிக்கையின் அடிப்படையில் இம்முறை அந்த மாவட்டத்திலும் போட்டியிடுகின்றது ஈ.பி.டி.பி.

இதேநேரம் ஈ.பி.டி.பி. ஆரம்பகாலம் முதற்கொண்டு தொடர்ச்சியாக கூறிவருகின்ற தேசிய நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் அதை வலுப்படுத்தும் நோக்குடன் கொழும்பு மாவட்டம் பல்லின பல மொழி பேசும் மக்கள் வாழும் இடமாக இருப்பதனால் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வகையில்வேட்பாளர்கள்களமிறங்குகின்றனர்.

அந்த வகையில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் இலக்கை அடைவதற்கு வர இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலில் எமது மக்கள் எமது கட்சிக்கு அணிதிரண்டு வாக்களித்து எம்மை வெற்றிபெறச் செய்வார்கள் என நம்புகின்றேன் என்று அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்தது.

தமிழ்தேசியமக்கள்முன்னணிகட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் தலைமை வேட்பாளருமான தர்மலிங்கம் சுரேஷ் தலைமையில் அக்கட்சியின் உறுப்பினர்கள் 8 பேர் நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் உறுப்பினர்களான தர்மலிங்கம் சுரேஷ், சுப்பிரமணியம் சத்தியநாதன், கணபதிப்பிள்ளை குககுமாரராசா, அழகையா தேவகுமார், விஸ்னுகாந்தன் சௌமியா, குமாரசிங்கம் லிவாஸ்கர், முத்துக்குட்டி சத்தியகுமார், விநாயகம் தரணிகரன் ஆகிய 8 பேர் இம்முறை தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளனர். இவர்ளில் இருவரை தவிர ஏனைய 6 பேரும் புதுமுகங்கள். வேட்பாளர்கள் கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு ஆகிய 3 தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இதேவேளை, வஜ.லவக்குமார் தலைமையிலான சுயேச்சைக் குழுவும் தமது வேட்புமனுவை நேற்றுத் தாக்கல் செய்திருந்தது.

இம்மாவட்டத்தில் 3 சுயேச்சை குழுக்களும் ஒரு அரசியல் கட்சியும் இதுவரை வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி தேர்தல்ஆணையாளர்சுபியான்தெரிவித்தார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார வளர்ச்சி துரிதமாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். 2033ஆம் ஆண்டு முதல் கடனை செலுத்தினால் போதும் என சர்வதேச நாணய நிதியம் கூறினாலும், 2028 ஆம் ஆண்டிலிருந்து அதனை செலுத்துவதாக முன்னாள் ஆளும்தரப்பினரும் ஜனாதிபதியும் உறுதியளித்ததால் 2028 முதல் இந்த கடனை செலுத்த வேண்டிய நிலை காணப்படுகிறது.

அப்போதைய ஆளும்தரப்பு இவ்வாறானதொரு முட்டாள்தனமான முடிவை எடுத்து பொருளாதாரத்தை சுருக்கியுள்ளது. இதனால் தொழிற்சாலைகள் வீழ்ச்சியடைந்ததுடன், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் கூட வீழ்ச்சியடைந்துள்ளனர்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் சார்பாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் பிரதிநிதிகளை சந்தித்து தமது பிரச்சினைகளை முன்வைத்து ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் 100 மில்லியன் டொலர்களை மானியமாக பெற்றுக் கொடுத்தோம். இந்த நாட்டை யார் ஆட்சி செய்தாலும் நாடு மீள வேண்டுமாயின், மக்கள் மீண்டு வர வேண்டுமாயின் பொருளாதாரம் அபிவிருத்தியடைவேண்டும்.

இதை ஒருவரால் செய்ய முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணித்தோடு இதைச் செய்ய வேண்டும். ஒரு நாடாக நாம் இந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி நாட்டை முன்னிலைப்படுத்தியே செயற்பட்டு வருகிறது. பொருளாதாரம் வலுவடைந்து, பொருளாதார செயல்முறைகள் வலுப் பெற்று, பொருளாதார வளர்ச்சி விகிதத்தை விரைவாக முன்னெடுக்க வேண்டும்.

இன்றும் 4 ஆண்டுகளில் கடனை அடைக்க வேண்டும் என்பதால், இதில் கவனம் செலுத்தி, இந்தக் கடன் செலுத்தும் இடைவெளியில் ஆண்டுதோறும் கடனை செலுத்தும் அளவுக்கு அந்நியச் செலாவணி கையிருப்பு நாட்டில் இருக்க வேண்டும். இதற்கான ஒரே திட்டம் பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு உருவாக்கம், அன்னிய நேரடி முதலீட்டை வலுப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தித் தொழில் திட்டத்தை நாடுவது மட்டுமேயாகும் என்றார்.

## வேட்பாளர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தமது வேட்புமனுக்களுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரங்களைக் கையளிக்கத் தவறுகின்றமை தண்டனைக்குரிய குற்றமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## வடக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். அப்போது இந்த இணக்கம் எட்டப்பட்டது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இதுவரையில் முன்னெடுக்கபட்டுவந்த அனைத்து ஒப்பந்தங்களும் அவ்வண்ணமே முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ தெரிவித்தார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு அவசியமான வசதிகளுக்கான நிதிஉதவிகளைவழங்கவும்ஆசியஅபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

அதன்படி சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்து வதற்கான நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மேம்படுத்த உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ இணக்கம் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கையில் வலுவச்தி மற்றும்சிறுதொழில்முயற்சிகளைமேம்படுத்த தேவையான நிதி உதவிகளை வழங்கவும், நிதித் துறையின் முன்னேற்றத்துக்கு தேவையான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான முன்னெடுப்புக்களின் பிரதானி சொல்பொத் மெம்பேடோவா, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பணிப்பாளர் நாயகம் டீ.ஏ.பி.அபேசேகர, பணிப்பாளர் உதேனி உடுகஹபத்துவ, சிரேஷ்ட பொருளாதார அதிகாரிகளான ஹஷிதா விக்ரமசிங்க மற்றும் லக்ஷினி பெர்னாண்டோ ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# நீர்கொழும்பு நகரின் தாழ்நில பகுதி கடும் மழை வெள்ளத்தால் பாதிப்பு





நாட்டில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் பெய்து வரும் கடும் மழைகாரணமாக நீர்கொழும்பு நகரில் சில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கட்டுவை பிரதேசத்தில் புவக்வத்த பகுதியில் சிறிய பாலத்தின் மேலாக வெள்ள நீர் பாய்வதன் காரணமாக பிரதேசத்தின் சில வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக அந்தப் பகுதியில் வாழும் மக்கள் உறவினர் நண்பர்களுடைய வீடுகளுக்கு சென்றுள்ளனர்.

பெரியமுல்லை பிரதேசத்தில் தெனியாயவத்த , இறப்பர் வத்த, கோமஸ் வத்தை உட்பட பல தாழ்நில பிரதேசங்களில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக இப்பகுதியில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சில இடங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# நாடாளுமன்ற தேர்தலில் ஆறுகட்சிகள் வேட்புமனு தாக்கல் செய்யமுடியாதாம்

## வெளியானது வர்த்தமானி அறிவித்தல்

நாடாளுமன்ற தேர்தலில் ஆறு கட்சிகள் போட்டியிடமுடியாது என தெரிவிக்கும்வர்த்தமானிஅறிவித்தல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக தேர்தலில் போட்டியிட முடியாத அரசியல் கட்சிகளின் விவரங்களை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஈழவர் ஜனநாயக முன்னணி, ஐக்கியமக்கள்சுதந்திரக்கூட்டமைப்பு, ஐக்கியஇலங்கைமக்கள்கட்சி, லங்கா ஜனதா கட்சி, இலங்கை முற்போக்கு முன்னணி உட்பட ஆறு கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாக வேட்பு மனுவை தாக்கல் செய்ய முடியாதுஎனதேர்தல்ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலில் தெரிவித்துள்ளது.

(05)

# வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாகக்கூறி பண மோசடி

## ஜப்பான் மொழி ஆசிரியர் கைது

ஜப்பானில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக கூறி பண மோசடி செய்ததாக கூறப்படும் ஜப்பான் மொழி ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஹொரனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரனை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின்பேரில்மேற்கொள்ளப்பட்ட விசாரணை யில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி வீதி, ஹொரனை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ஜப்பான் மொழி ஆசிரியரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஜப்பானில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக கூறி 3,967,500 ரூபா மோசடி செய்துள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பின்னர், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஞாயிற்றுக்கிழமை ஹொரனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# இரண்டு ஆசனங்களை வன்னியில் மூன்றை யாழில் கைப்பற்றுவோம்

## ஈ.பி.டி.பியின் நம்பிக்கை இது



வன்னி தேர்தல் தொகுதியில் இரண்டு ஆசனங்களையும் யாழ் தேர்தல் தொகுதியில் மூன்று ஆசனங்களையும் கைப்பற்றுவோம் என ஈ.பி.டி.பி சார்பில் திங்கட்கிழமை வேட்பு மனு தாக்கல் செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்தார்.



நேற்று வன்னி தேர்தல் தொகுதிக்கான வேட்பு மனுவை வவுனியா தெரிவத்தாட்சி அதிகாரி அலுவலகத்தில் தாக்கல் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஈ பி டிபி க்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பிருக்கிறது. எமக்கு தொலைபேசியிலும் நேரிலும் மக்கள் வாழ்த்துக்களை தெரிவித்த வண்ணம் இருக்கிறார்கள்.

நாம் பல அபிவிருத்தி திட்டங்களை இந்த பிரதேசங்களில் மேற்கொண்டுள்ளோம். அதன் பிரதிபலிப்பாக எமக்கு இரண்டு ஆசனங்கள் இம்முறை வன்னி தேர்தல் தொகுதியில் கிடைக்கும்.

அதேபோல் யாழ். தேர்தல் தொகுதியில் மூன்று ஆசனங்களைநாங்கள்கைப்பற்றுவோம். இதன்மூலமாகமக்களுக்கானஅபிவிருத்தியை முன்னெடுப்போம் எனவும் தெரிவித்தார். (05)

# எல்பிட்டி பிரதேச சபைக்கு வாக்களிப்பது எப்படி?

எல்பிட்டி பிரதேச சபை தேர்தலில் வாக்குளிக்கும்முறைதொடர்பில்தேர்தல் ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவித்தலில் குறிப்பிடப் படுவதாவது-

எல்பிட்டி பிரதேச சபை தேர்தலில் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்குச் சீட்டு மாத்திரமே விநியோகிக்கப்படும்.

வாக்குச் சீட்டுகளில் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் பெயர்கள் மற்றும் சின்னங்கள் மாத்திரமே காணப்படும்.

வாக்களிக்கும் போது, நீங்கள் விரும்புகின்ற கட்சியின் அல்லது சுயேட்சை குழுவின் பெயர் மற்றும் சின்னம் காணப்படும் இடத்தில் (X) என்ற புள்ளடியை அடையாளமிடல் வேண்டும்.

மேலும், வாக்களிப்பதற்கு ஒரே யொரு புள்ளடியை (X) மாத்திரம் பயன்படுத்துமாறுதேர்தல்ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (05)

# மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி நுவரெலியா – லிந்துலை பகுதியில்







நுவரெலியா, லிந்துலை சுகாதார அதிகாரி ஏற்பாட்டில் மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி மற்றும் அது தொடர்பிலான விழிப்புணர்வு வீதி நாடகமும் திங்கட்கிழமை லிந்துலை நகரில் நடைபெற்றது.

மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி லிந்துலை சுகாதார அதிகாரி வைத்தியர் ரெய்ஷினி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது விழிப்புணர்வு நடைபவனியும் விழிப்புணர்வு நாடகமும் லிந்துலை நகரில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு நுவரெலியா ஹட்டன் பிரதான வீதி வழியே 1 கிலோமீற்றர் தூரம் சென்று லிந்துலை நகரை வந்தடைந்தது.

லிந்துலை சுகாதார பணிமனை மற்றும் சுகாதார துறை சார்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள்,மற்றும் பொதுமக்களும் கலந்துக் கொண்டமைக் குறிப்பிடத்தக்கது.

மேலும்,இதன்போது விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டதுடன், மார்பகப் புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வு தகவல்களும் வழங்கப்பட்டன. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2024இல் வெளியிடப்பெற்றது